**செய்தி வெளியீடு எண்**: 897 நாள்: 22/10/2008

# பத்திரிக்கைச் செய்தி

மாநில அளவிலான தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டுக் கூட்டம் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையர் திரு. க. ராஜாராமன், இ.ஆ.ப., தலைமையில் **21.10.2008** அன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலம் முழுவதிலுமுள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு **26** அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை, தொழிலாளர் நலத் துறை, பதிவுத் துறை, பொது நூலகத் துறை, விருதுநகர் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, மின் வாரியம் (மதுரை) வட்டார போக்குவரத்து அலுவலர், விருதுநகர், திருவள்ளூர், திருநெல்வேலி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், கோவை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருச்சி, திருநெல்வேலி மாநகராட்சி, இந்தியன் ஆயின் நிறுவனம் மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஆகிய துறைகளிலிருந்து அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். நுகர்வோர் அமைப்புகள் அனுப்பி வைத்த கருத்துருக்கள் இக்கூட்டத்தின் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் அனுப்பி வைத்த கருத்துருக்கள் / கோரிக்கைகள் மீது சம்மந்தப்பட்ட துறைகள் எடுத்த நடவடிக்கை விவரத்தினை அதன் அலுவலர்கள் நேரடியாக இக்கூட்டத்தில் விளக்கினர். விவரம் பின்வருமாறு

1. நோயாளிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சிகிச்சைக்காக காலை நேரங்களில் வரும்போது மருத்துவர்கள் / செவிலியர்கள் பணியில் இல்லாமல் இருப்பின் புகார் தெரிவிக்க மாநில அளவிலான இலவச தொலைபேசி அழைப்பு புகார் மையம் ஒன்றினை ( Toll Free ) ஏற்படுத்த வேண்டும் என நுகர்வோர் அமைப்புகள் கோரிக் கை மீது பொது சுகாதார துறை உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுகொள்ளப்பட்டது
2. மாற்று எரிவாயு உருளை **40** முதல் **45** நாட்கள் காலதாமதாக வழங்கப்படுவதாகவும் உருளை விநியோகத்தின் போது ரூ.**25** வரை அதிகமாக கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும் மாநிலம் முழுவதிலுமிருந்து பெரும்பாலான நுகர்வோர் அமைப்புகள் புகார் தெரிவித்தன. இப்புகார்களை தவிர்த்திட எண்ணெய் நிறுவனங்கள் மாவட்ட அளவில் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமைல் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் முறையாக காலாண்டுக் கூட்டங்கள் நடத்த வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
3. நெடுஞ்சாலைகளில் உள்ள பேருந்து பயணிகள் இளைப்பாறும் சாலையோர உணவகங்களில் உள்ள உணவுப் பொருட்கள் சுகாதாரமில்லாமலும் அதிகபட்ச சில்லறை விலையை விட கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டது. இதனை சுகாதாரத் துறை தீவிரமாக கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சமீபத்தில் விக்கிரவாண்டியில் இரண்டு உணவகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற தகவலை அத்துறையின் அலுவலர் தெரிவித்தார். இருப்பினும் மற்ற பகுதிகளில் செயல்படும் சுகாதார கேடான சாலையோர உணவகங்கள் மீது நடவடிக்கை எடுக்க பொது சுகாதார துறை கேட்டுக் கொள்ளப்பட்டது.
4. முத்திரைதாள் மற்றும் நீதிமன்ற வில்லைகள் அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது. முத்திரை தாளில் அச்சிடப்பட்டதை விட அதிக தொகை வசூலிக்கும் விற்பனையாளர் மீது

குறிப்பான புகார் அளித்தால் அவரது உரிமத்ததை ரத்து செய்ய பதிவுத் துறை உடன் நடவடிக்கை எடுக்கும் என பதிவுத் துறையின் அலுவலர் தெரிவித்தார். பத்திர பதிவுத் துறை என்பது பொதுமக்கள் அணுகும் துறையாக இருப்பதால் உரிமம் பெற்ற முத்திரை தாள் விற்பனையாளர்களின் பெயர்களை அனைத்து சார் பதிவாளர் அலவலகங்களிலும் காட்சிப்படுத்த பதிவுத் துறை கேட்டுக் கொள்ளப்பட்டது.

5. மாநிலத்தின் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகக்கு ஒருங்கிணைப்பு துறையான உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இணைய தளமான www.consumer.tn.gov.in - ஐ நுகர்வோர் அமைப்பினர் பயன்படுத்தி அனைத்து வகை புகார்களையும் நேரடியாக பதிவு செய்ய (Online Consumer complaint facility) ஆணையாளர் கேட்டுக்கொண்டார். மேலும் புகார்களை consumer@tn.nic.in என்ற முகவரிக்கும் மின்அஞ்சல் வாயிலாக அனுப்பலாம் எனவும் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு வருகைபுரிந்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பினருக்கும், அரசு துறை/ நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**ஒம்/– க. ராஜராமன்,**
**ஆணையாளர்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9